# பெருஞ்சிலைகளை விஞ்சிய பேரறிவுச் சிலை!

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் திரு வள்ளுவரின் சிலை அமைந்து கால் நூற்றாண்டு ஆகிறது. அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடும் விதத்தில் அந்தத் திருவள்ளுவர் சிலைக்குப் பேரறிவுச் சிலை (statue of wisdom) என்று பெயர் சூட்டியிருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

கன்னியாகுமரியின் வள்ளுவர் சிலை இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய சிலை. நின்ற கோல சிலைகளில் உலகத்திலேயே 32 வது இடத்தை அது பெறுகிறது. உலகம் முழுவதும் அரசர்களும் இறைவர்களும் மதத்தலைவர்களும் சிலைகளாய்க் காட்சிதர இலக்கிய வாதி ஒருவர் எழிலோடு உயர்ந்து கடலில் நிற்கும் உலகின் ஒரே பெரிய சிலை கன்னியாகுமரியின் வள்ளுவர் சிலை.

நீர்மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது வள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே மிக உயரமான 133 அடி அளவு உள்ள சிலை அது...

ஆம்... திருவள்ளுவருக்கு நாம் சிலை அமைத்திருக்கிறோம். ஆனால் அவரோ திருக்குறளில் சிலை என்கிற சொல்லைக் கூட வைக்கவில்லை. மலையை ஒன்பது இடங்களில் உருவாக்கியவர், சிலையைத் தொடவில்லை; சிற்பத்தையும் கூட.


திருக்குறளின் 14,000 சொற்களில் ஒரு இடத்தில் கூட 'சிலை' என்று எழுத்தில் வரவில்லை. சிலை என்கிற கருத்தாக்கம் அவர் காலத்தில் இல்லையோ என்ற சந்தேகம் வருகிறது. இருந்தும் பயன்படுத்தாது கூட அவர் விட்டிருக்கலாம். 'ஔ' என்ற உயிரெழுத்தை அவர் பயன் கொள்ளவில்லை. அதனால் அது தமிழ் நெடுங் கணக்கில் இல்லை என்றாகிவிடுமா, என்ன?

**சிலையும் தமிழும்**

சிலைக்குச் சிலை (statue) என்ற பொருள் தமிழில் முன்பு வழக்கில் இல்லை. சிலைக்கு வில் என்பதே பழம்பொருள். "சிலை எழுபது " என்று கம்பர் எழுதிய தாக கூறப்படும் நூல் வில் பற்றியதே. அண்மைக்கால பாரதியும் வில் என்கிற பொருளிலேயே தான் சிலை என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். "வெஞ்சிலை வீரன் பல்சொல் விரித்தான் " (ஆரிய தரிசனம்) என்பது அவர் எழுத்து. வில் மட்டுமல்ல தனுராசி, மார்கழி, வானவில், ஒளி, கல், மழை, அம்மி, கலுவம், உருவம், கோபம், மரவகை, ஒளி, கோபி, பின்வாங்கு எனப் பல பொருள்களையும் பல அகராதிகள் வழங்குகின்றன. இதில் உருவம், கல் போன்ற பொருள்களே இன்று சிலைக்கு வந்துள்ளன.

**தென்னாடும் சிலையும்**

திராவிட நாட்டில் ஒரு இலக்கியவாதிக்கு இவ்வளவு



உயரச் சிலை தமிழ்நாட்டில் தான் எழுப்பப்பட்டுள்ளது. கேரளத்தில் திருவள்ளுவருக்கு இணையாக புகழ் படைத்த எழுத்தச்சனுக்குத் துஞ்சன் பரம்பில் உட்கார்ந்த நிலையில் ஒரு சிலை உண்டு. உள்ளூர் பரமேஸ்வர ஐயர், வள்ளத் தோல் நாராயண மேனன், குமாரன் ஆசான் ஆகிய மூன்று கேரள மகாகவிகளுக்கும் சிலைகள் இருக்கின்றன. ஆனால் அவை பெரியவை அல்ல.

கேரளத்தில் நான் பார்த்த அளவில் திருச்சூரில் கொச்சி மகாராஜா, திருவனந்தபுரத்தில் திவான் மாதவ ராவ், வைக்கத்தில் மன்னத்து பத்மநாபன் சிலைகள் சற்று பெரியன. கர்நாடகத்தில் சரவணபெலகோலாவில் சமண முனிவரின் பெருஞ்சிலை (57 அடி) உண்டு. மதச் சிலைகளைத் தவிர இலக்கியவாணரின் பெருஞ்சிலை ஏதும் கர்நாடகத்தில் இருப்பதாக விசாரித்தவரை தெரியவில்லை.

திருவள்ளுவருக்கு ஈடாக நாம் பரிமாறிக் கொண்ட சர்வக்ஞருக்கு இவ்வளவு பெரிய சிலை இல்லை.



இன்னொரு கன்னட ஆளுமையான பசவண்ணாவுக்குப் பெங்களூருவில் சிலை உண்டு என்றாலும் அது பெரியது அல்ல. தெலுங்கு தேசத்தில் சமுதாயவாதி அம்பேத்கருக்கும் (125 அடி), உசைன் சாகர் நீர் நிலை நடுவில் சமயவாதி புத்த ருக்கும் (58 அடி) அழகிய சிலைகள் அமைந்துள்ளன. என்றாலும் வள்ளுவரைப் போல இலக்கிய வாதிகளுக்குப் பெருஞ்சிலைகள் தெலுங்கு தேசத்தில் இல்லை.

திருப்பதியில் உள்ள எம். எஸ். சுப்புலட்சுமி, அன்னமய்யா சிலைகள் இசைக்கலைஞர் என்ற வகைப்பாட்டில் வருவன. மேலும் ஒப்பீட்டளவில் சிறியவை. தமிழ்நாட்டில் தான் இலக்கிய வாதிக்குப் பெருஞ்சிலை ஒன்று இயன்றிருக்கிறது.

**தலைநகரில் வள்ளுவர் சிலைகள்**

சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைத் தவிர வேறு மூன்று வள்ளுவர் சிலைகள் குறிப்பி டத்தக்கன. இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி 1968 இல் கடற்கரைச் சாலையில் உருவான தமிழறிஞர்கள் சிலைகளுள் ஒன்று வள்ளுவர். அச்சிலை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு நேர் எதிரே நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. அதன் உயரம் சில பல அடிகள் இருக்கலாம். இன்னொன்று மயிலாப்பூர் சமஸ்கிருதக் கல்லூரிக்கு எதிரில் அமர்ந்த வடிவிலான ஒரு சிலை.

மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கு ஒரு கோயில் உள்ளது. அதில் அமர்ந்த நிலையில் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு சிலை உண்டு . ஆனால் அது பாந்த மற்றது. தாகூர் கூட அந்தக் கோயிலுக்கு வந்துள்ளார், சிலையைப் பார்த்துள்ளார். என்ன நினைத்தாரோ? எவ்வகையிலும் பார்க்க கன்னியாகுமரியில் திகழ்வது எழில் கசியும் கம்பீரமான சிலை.

**தெய்வச்சிலைகளே வழமை**

மேற்கைப் போலல்லாமல் இந்திய சிற்பங்கள் புறத்தோடு அகத்தையும் வடிப்பன. தொடக்கத்தில் சிலைகள் அரசர்களுக்கும் தெய்வங்களுக்குமே உருவாக்கப்பட்டன. தெய்வச் சிலையார் ( 15 ஆம் நூற்றாண்டி னர்) என்ற பெயரிலேயே ஒரு உரையாசிரியரும் கூடத் தமிழில் உண்டு. "நினைவாலே சிலை செய்து உனக்காக வைத்தேன்" என்று உருகும் திரைப் படக் காதலனும் "திருக்கோயிலே ஓடிவா " என்று காதலியின் நினைவைக் கோயில் சிலையாகவே பார்க்கிறான்.



**நவீன கால சிலைகள்**

தெய்வங்களுக்குப் பிறகு மனிதர்களுக்குச் சிலைகள் உருவாயின. தெய்வ நம்பிக்கை அற்று மனிதர்களை நம்பியவராயினும் நேரு உயிருடன் உள்ள மனிதர்களுக்குச் சிலை வைக்க விரும்பாதவர். எனினும் தன் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு கர்மவீரர் காமராசருக்குச் சென்னையில் சிலை திறந்தார். சென்னை ஜிம்கானா கிளப் அருகில் குதிரை ஏறிய மன்றோ சிலைக்கு எதிரில் வேட்டியுடன் கம்பீரமாக நிற்கும் சிலை, நேரு திறந்தது தான். அந்த இடத்தில் "புகழ் விரும்பி " வெலிங்டன் பிரபுவின் சிலை தான் முன்பிருந்தது. முதல் இந்திய விடுதலைப் போரின் நூற்றாண்டை யொட்டி ஏகாதிபத்திய பிரதிநிதிகளின் சிலைகள் இந்தியாவில் பொது இடங்களில் இருக்க வேண்டாம் என்று காங்கிரஸ் கருதியதன் அடிப்படையில் 1937 லிருந்து அவ்விடத்தில் விளங்கிய வெலிங்டன் சிலை 1957 இல் கோட்டை மியூசியம் சென்றது. அந்த சிலை இருந்த பீடத்தில் தான் 1961 இல் காமராசர் வந்து நின்றார்.

**பழ அதியமான்**
எழுத்தாளர்



**சிலை உருவாவதின் சிரமம்**

வைக்கலாம் என்று இரவு முடிவு செய்து மறுநாள் காலையில் பிரதிஷ்டை செய்யப்படுவனவல்ல சிலைகள். கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை 1990 இல் செய்யத் தொடங்கி 1999 இல் தான் வடித்து முடிக்கப்பட்டது. எந்த செய்யப்பட்ட சிலையும் ஜல வாசம், தானியவாசம், ரத்தின வாசம், தன வாசம், வஸ்திர வாசம், சயனவாசம் எனப்படும் பல சோதனைகளைக் கடந்தே ஒரு முடிவான சிலையாகிறது. இந்தச் சோதனைகள் காலத்தை வென்று நிற்க விரும்பிச் செய்யப்படும் எந்தச் சிலைக்கும் உகந்தது தான்.

தண்ணீரில் சிலையை 48 நாட்கள் முழுக வைத்திருப்பது என்பது கண்ணுக்குத் தெரியாத துளைகள் ஏதேனும் சிலையில் இருந்தால் அச்சோதனையில் அவை தெரிந்துவிடும். தேர்ந்தெடுக்கப்பட்ட பலவகை தண்ணீரையே இந்த நீர் முழுக்காட்டலுக்குப் பயன்படுத்துவர். அதைப்போல பல வகை தானியங்களின் சூழ்நிலையில் சிலை வைக்கப்படுவது தானிய வாசம். தானியம் தரும் வெப்பத்திற்குப் பிறகும் சிலை சிதைவின்றி நீடிக்கின்றனவா என்பது அச்சோதனையில் சோதிக்கப்படும். இத்தகைய ஆறு சோதனைகள் 288 நாட்கள் நிகழ்த்தப்படும். இதன் மூலமாகப் பொருத்தமான கல்லில் தான் சிலை உருவாகியுள்ளது என்பது உறுதியாகும். அதற்குப் பிறகுதான் அது சரியான சிலை என்று முடிவு செய்வர்.

அனுபவமும் திறமையும் மிக்க கணபதி ஸ்தபதி என்ற பெருந்தச்சரால் உருவாக்கப்பட்டதால் இத்தகைய சோதனைகளை வள்ளுவரும் கடந்திருப்பார் என்று நம்பலாம். தச்சன், வர்தஹி, சூத்ரகாரி என்ற மூன்று நிலைகளைக் கடந்து நான்காவது பெரு நிலையில் உள்ள பெருந்தச்சரே ஸ்தபதி எனப்படுகிறார்.

**அமெரிக்காவின் சுதந்திர தேவி "உலகை அறிவூட்டும் சிலை" எனப்படுகிறார். தெலுங்கு தேசத்தில் எழுப்பப்பட்டிருக்கிற அம்பேத்கர் சிலையைச் "சமூக நீதி சிலை" எனப் புகழ்கின்றனர். எல்லோரையும் சமப்படுத்த முயன்ற ராமானுஜருக்கு எழுப்பப்பட்டிருக்கிற சிலையைச் "சமத்துவ சிலை" என்று அழைத்து மகிழ்கின்றனர். இந்தியாவுடன் சமஸ்தானங்களை இணைத்த வல்லபாய் பட்டேலின் சிலையை "ஒற்றுமைச் சிலை " என்று முழங்குகின்றனர். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என உலகத்துக்கு அறிவூட்டிய கன்னியாகுமரியில் எழுந்திருக்கிற வள்ளுவர் சிலைக்கு இப்போது " பேரறிவுச் சிலை" (statue of wisdom) பெயரிட்டிருக்கின்றனர்.**

பிறந்த குழந்தைக்குத் தான் பெயர் வைப்பார்கள், வளர்ந்த குழந்தைக்கு யாராவது பெயர் வைப்பார்களா என்று கேட்கலாம். மன்னர்கள் அரியணை ஏறும் போது வம்சப் பெயருடன் பொலிவதில்லையா?

பூராடம் திருநாள் மகாராணி அரியணை ஏறும் வரை சேது லட்சுமி பாய் என்பது தானே அவர் பெயர். மடத்துத் தலைமை ஏற்கும் போது துறவிகள் புதிய பெயரைத் தரிப்பதில்லையா?

**அது போல் தான் வள்ளுவர் சிலையை இன்று "பேரறிவுச் சிலை" என்று கொண்டாடுகிறோம்.**

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவிற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

# மதுரை வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

*மதுரை, ஜன. 1 -* கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 16ஆம் தேதி உலகப் புகழ்பெற்ற தமிழர்களின் வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதால் அது தொடர்பாகவும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் வருகிற மூன்றாம் தேதி மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி



தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதன் விபரம்

தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலக புகழ் பெற்றதாகும். இத்தகைய ஜல்லிக்கட்டு தடை பட்ட போது முதலில் சட்டப் போராட்டம் கண்டு மீட்டுக் கொடுத்தவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆவார். அதேபோல் மீண்டும் தடை கண்ட ஜல்லிக்கட்டை மீட்டெடுக்க பெரும் முயற்சி கொண்டவர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவார் என்பதை நாடே அறியும்.

இத்தனை பெருமை மிக்க உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு வருகிற 16.01.2025 ஆம் தேதி வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

அதனையொட்டி முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழாவை துவக்கி வைக்க வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை வடக்கு மாவட்ட செயல் வீரர்கள் கூட்டம் வருகிற 03.01.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை ஆலத்தூரில் அமைந்துள்ள பி.ஆர். திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் குமரி முனையில் நிறுவப்பட்ட ஐயன் திருவள்ளுவர் திருஉருவச் சிலைக்கு வெள்ளி விழா கொண்டாடும் நிலையில் வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள ஐயன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வே.ரா.சுப்புலட்சுமி மாநகரக் கழகசெயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் சுஜாதா ஆனந்தகுமார், டாக்டர் வி.எஸ்.விஜய், எம்.சுனில் குமார், ஆணையர் ஜானகி, ஞானவேல், ஆர்.பி.ஏழுமலை, எஸ்.கதிரேசன், சி.சந்திரசேகர், மா.ப.அன்பு நிதி, என்.நூருல்லா. வேலூர் ஜி ரமேஷ் வி.ஜி.கே.சுந்தர் விஜி, ஜி.பாலமுரளி கிருஷ்ணா, பி.முருகப்பெருமாள், ஆர்.பி.சசிகுமார், வீனஸ் ஆர். நரேந்திரன் கே.யூசுப்கான் வி.எஸ்.முருகன் கா.சு.சண்முகம் டி .சக்கரவர்த்தி, ஜெய்சங்கர், டி. திருப்பாவை, கே.காஞ்சனா, தபசும் பர்வீன் எம்.தேவராஜ் கே.சீனிவாச காந்தி ஆர்.அருள் ஏ.உமாசந்திரன் எம்.அந்தோணி அப்துல் மஜீத் என்ற காலப்பா ரமேஷ் நீதி என்கின்ற அருணாச்சலம் வி.எம்.டி.ஏ.பாலாஜி, ஆர். கருணாநிதி கே.கோபிநாத் ஏ. கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி வளாகத்தில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதுமைப்பெண் திட்ட விரிவாக்கம் இத்திட்டத்தை தொடங்கி வைத்து மாணவிகளுக்கு இத்திட்டத்திற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, அ.செ. வில்வநாதன், நகர மன்ற தலைவர் சங்கிதாவெங்கடேசன், ஒன்றியக்குழு தலைவர்கள் விஜயா அருணாசலம், திருமதி திருமுருகன், சங்கிதாபாரி, நகர மன்ற துணைத்தலைவர் ஏ.ஆர்.சபியுல்லா மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவி வெள்ளிவிழா கண்டதை முன்னிட்டு வேலூர் மாவட்ட மைய நூலகத்தின் சார்பில் நடத்தப்பட்ட திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு மாநகர திமுக செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி ஆகியோர் சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகைகளை வழங்கினார்கள். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர்கள் ஆர்.வீனஸ் நரேந்திரன், கே.யூசுப்கான் மாமன்ற உறுப்பினர் காசு.சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.